வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்

WENTWORTHVILLE

TAMIL STUDY CENTRE

# தமிழ் அறிவுப் போட்டி 2019

## ஆண்டு 9 (Non HSC) விபுலானந்தர்

## மாதிரி வினாக்கள்

1. புதல்வன் என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல் ஒன்று கூறுக?

**விடை:**

புத்திரன்

(மைந்தன், மகன்)

2. “வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி”

என்று தொடங்கும் பாடலை எழுதியவர் யார்?

**<u>விடை:</u>**

# பாரதியார்

3. விளையாடுகிறான் என்பது நிகழ்காலம்.

இதனை இறந்தகாலத்தில் எப்படி கூறலாம்?

**விடை:**

# விளையாடினான்

4. தலைமுறை தலைமுறையாக நமது முன்னோர்கள் வாழ்ந்த இடத்தை எப்படி அழைப்போம்?

**விடை:**

# பூர்வீகப் பிரதேசம் / தாயகம்

5. அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் ஒரு தமிழ்ச் சஞ்சிகையின் பெயர் தருக.

விடை:

# தமிழோசை

# (தென்றல், மெல்லினம், இளவேனில்)

6. பழந்தமிழரின் பெருமைக்குக் காரணமாக அமைந்த இரு கலைகளைக் கூறுக?

**<u>விடை:</u>**

# சிற்பக் கலை

# ஓவியக் கலை

# (கட்டடக் கலை, நாட்டியக் கலை)

7. தமிழர்களின் வாழ்க்கை முறையில் தற்போது மாற்றங்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணி யாது?

**<u>விடை:</u>**

# பிற கலாசாரச் செல்வாக்கு

8. மாமல்லபுரத்தின் சிறப்பு என்ன?

**விடை:**

# சிற்பக் கலைக்குப் பெயர் பெற்றது

9. எழுத்துப்பிழையற்ற சொல்லைத் தெரிவு செய்க.

1. ஆசரியார்
2. ஆசிறியர்
3. ஆசிரியர்

**<u>விடை:</u>**

3. ஆசிரியர்

10. நிலம் என்ற சொல்லிற்கு பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க?

1. ஆகாயம்

2. தரை

3. தண்ணீர்

**விடை:**

2. தரை

11. அட்டாவதானியால் ஒரே சமயத்தில் எத்தனை விடயங்களை அவதானிக்க முடியும் எனக் கூறப்படுகிறது?

**<u>விடை:</u>**

# 8 விடயங்கள்

12. பாடல்களால் எழுதப்பட்ட கதை நூலை எவ்வாறு அழைப்பார்கள்?

1. புத்தகம்
2. காப்பியம்
3. சிறுகதை

**<u>விடை:</u>**

2. காப்பியம்

13. தமிழர் பண்பாட்டில் சிறந்த பண்பாடு ஒன்றைக் கூறுக?

**<u>விடை:</u>**

# விருந்தோம்பல்

# (பெரியோரை மதித்தல்,

# விருந்தினரை வரவேற்றல்)

14. வெள்ளிவிழா எப்போது கொண்டாடப்படும்?

1. 25 ஆவது ஆண்டு தொடக்கத்தில்

2. 25 ஆவது ஆண்டு நடுவில்

3. 25 ஆவது ஆண்டு நிறைவில்

**விடை:**

# 3. 25 ஆவது ஆண்டு நிறைவில்

15. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசி என்னும் நூல் தமிழ்த் தாயின் எந்த அணிகலனாகப் போற்றப்படுகின்றது?

**<u>விடை:</u>**

# குண்டலம் / தோடு

16. அவுஸ்திரேலியாவின் அரச சின்னத்தில் காணப்படும் உயிரினங்கள் எவை?

**விடை:**

கங்காரு

இமு (இமியு)

17. இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு,

துவர்ப்பு, கார்ப்பு, கசப்பு

ஆகியன ...

1. ஐம்பொறிகள்

2. ஐம்பூதங்கள்

3. அறுசுவைகள்

**<u>விடை:</u>**

# 3. அறுசுவைகள்

18. தமிழ் எழுத்துக்கள் நான்கு வகைப்படும்.

*அதில் ஒன்று மெய் எழுத்து*

*இன்னொன்று உயிர் எழுத்து.*

மற்றைய இரண்டையும் கூறுக?

**<u>விடை:</u>**

## ஆய்த எழுத்து (ஆயுத எழுத்து)

## உயிர்மெய் எழுத்து

19. குயில் கூவும் என்பது போல் யானை ..........?

1. கர்ச்சிக்கும்
2. பிளிறும்
3. சீறும்

**<u>விடை:</u>**

2. பிளிறும்

20. பின்வரும் பழமொழியை முடித்துவைக்கவும்.

முயற்சி உடையார் ...................?

**<u>விடை:</u>**

**இகழ்ச்சி அடையார்**

21. இந்த இசைக் கருவியின் பெயர் என்ன?



**விடை:**

# பறை

22. கடலும் கடல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?

**<u>விடை:</u>**

# நெய்தல்

23. சூரியன் என்ற சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொற்கள் இரண்டினைத் தருக?

**<u>விடை:</u>**

**கதிரவன், ஞாயிறு**

**(பகலவன், கதிரோன், வெய்யோன், பரிதி)**

24. தமிழர் பண்பாடுகள் மூன்றினைக் கூறுக?

விடை:

தாய் தந்தையரைப் பேணுதல்

வந்தாரை வரவேற்று விருந்தோம்புதல்

பிறருக்கு உதவுதல்

(பெற்றோர்களையும், பெரியோரையும், ஆசிரியர்களையும் மதித்தல்)

25. தமிழர் கிராமிய நடனங்கள் இரண்டின் பெயர்களைத் தருக?

விடை:

கரகம்

காவடி

(கும்மி, கோலாட்டம், மயிலாட்டம்)